மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (09.01.2026) சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள, தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்ககத்தின் 60வது ஆண்டு வைர விழா மற்றும் மருத்துவ அறிவியல் மாநாட்டில் தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர் மருத்துவப் பல்கலைக்கழக துணை வேந்தர் மரு.நாராயணசாமி அவர்கள் இயற்றிய "கல்லீரல் காப்போம் எனும் நூலினை வெளியிட்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவப் பணியாளர் தேர்வாணையம் தலைவர் திருமதி.உமாமகேஸ்வரி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் மரு.வினீத், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை இயக்குநர் மரு.சோமசுந்தரம், முன்னாள் மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர்கள், அனைத்து மருத்துவக்கல்லூரி முதல்வர்கள், மருத்துவப் பேராசிரியர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாவட்டம், கொண்டப்பநாயக்கன்பட்டியில் செவித்திறன் குறைபாடு உடையோருக்கான அரசு உயர்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள டாக்டர் குமரன் அப்புசாமி நினைவு விளையாட்டுப் பூங்காவினை நேற்று (09.01.2026) திறந்து வைத்து, மாணவ, மாணவியர்களுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், மாவட்ட மாற்றுத்திறனாளி அலுவலர் திருமதி செண்பகவள்ளி, மாவட்ட நீதிபதி (ஓய்வு) வேணுகோபால், டென்னீஸ் நண்பர்கள் குழு உறுப்பினர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளை!

"அன்னம் தரும் அமுதகரம்" 324 வது நாள்!

துறைமுகம் தொகுதியில் உணவு வழங்கப்பட்டது!

சென்னை,ஜன.10- முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 324ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று (09.01.2026), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55ஆ, எண்.1 ஆச்சாரப்பன் தெரு. தாதா முத்தியப்பன் தெரு சந்திப்பு, 2) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 54, தங்க காலை தெரு, அரசு அச்சகம் அருகில், சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அற நிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழிகாட்டுதல்படி தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட் டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், இசட்.ஆசாத், பி.ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக்அப்துல்லா, இப்ராஹிம்கனி, ஆர். கலைச்செல்வி, P.விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம்.விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: எல். சத்தியநாராயணன், எஸ்.புகழேந்தி, ஆர்.எ.அஸ்லாம், டி.கதிரவன் (எ) ராஜா, எம். பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எம்.ஜெய்சங்கர், பா.கதிரவன், ஆர்.இரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, டி.சதிஷ்குமார், வே.பா.பிரபாகரன், லண்டன் க. முருகன். ஒருங்கிணைப்பாளர்கள்: சொ. வேலு, S.முரளி, பெரம்பூர் R.ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜயகுமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பாக

"திராவிட பொங்கல் விளையாட்டு விழா"!

சென்னை, ஜன.10- கழக தலைவர் மக்கள் முதல்வர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி சார்பாக நடத்தப்படும் "திராவிட பொங்கல் கிரிக்கெட் போட்டி" இன்று (10.01.2026 - சனிக்கிழமை) காலை 7.00 மணியளவில் கோபாலபுரம் கிரிக்கெட் மைதானத்தில் நடைபெறுகிறது.

போட்டியினை கழக அமைப்பு இணை செயலாளர் அன்பகம் கலை, கழக மருத்துவ அணி செயலாளர் Dr.நா.எழிலன், கழக விளையாட்டு மேம்பாட்டு அணி துணை செயலாளர் வே. கௌதமன், ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை ஆகியோர் துவக்கி வைக்கின்றனர்.

வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பை மற்றும் பரிசுப் பொருட்களை சென்னை மேற்கு மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு மற்றும் கழக விளையாட்டு மேம்பட்டு அணி செயலாளர் தயாநிதி மாறன் எம்.பி. வழங்குகிறார்கள்.

யிரம்விளக்கு கிழக்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் மு.செல்வம் தலைமை வகிக்கிறார். சென்னை மேற்கு மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் கோ.ராஜராமன், துணை அமைப்பாளர் வி. எஸ்.கவாஸ்கர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள்.

இந்நிகழ்வில் மாவட்ட நிர்வாகிகள் து.விக்டர், வி. எஸ்.கலை, ஆர்.என்.துரை, ஆ. சங்கீதா, ஜெ.எஸ். அகஸ்டின்பாபு, ஐ.கென்னடி, துபாய் வி.ஆர்.விஜய், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், வட்டக் கழக செயலாளர்கள், விளையாட்டு மேம்பாட்டு அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் ஹாக்கி எம்.எஸ்.சதிஷ், ஆர். உதயகுமார், கே.குமரவேல், கே.கமல், ஆர்.வினோத் கண்ணன், அன்பு செழியன், அ.ஷிபா தாணு, எம்.இருதயராஜ், ஜோஷ்வா, சேப்பாக்கம் ராஜ் கலந்து கொள்கிறார்கள். ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

சைதை கிழக்கு 172–172(அ) வட்டத்தில் நல உதவிகள் –

பொங்கல் விழா - அமைச்சர் மா.சுப்பிரமணியன் துவக்கி வைக்கிறார்!

பகுதிச் செயலாளர் இரா.துரைராஜ் எம்.சி. அறிக்கை!

சென்னை, ஜன.10- சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி திமுக செயலாளரும் 13வது மண்டலக்குழு தலைவருமான இரா.துரைராஜ் எம்.சி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

திராவிட மாடல் நாயகன் கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பின்படி திராவிடப் பொங்கல் சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம் சென்னை தெற்கு மாவட்டம் சைதை கிழக்கு பகுதி திமுக சார்பில் 11.01.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணிக்கு சக்கரபாணி தெருவில் அமைந்துள்ள சமூக கூடத்தில் சைதை கிழக்கு பகுதி செயலாளரும், 13வது மண்டலக்குழு தலைவருமான இரா.துரைராஜ் எம்.சி. தலைமையில் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் பொங்கல் விழாவை துவக்கி வைத்து 172 மற்றும் 172அ" வட்டத்தில் உள்ள நிர்வாகிகள் அணிகளின் நிர்வாகிகள் முன்னோடிகள் சார்பு மன்ற நிர்வாகிகள் பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள் உள்ளிட்ட 500 க்கும் மேற்பட்ட கழகத்தினர்களுக்கு பொங்கல் புத்தாடைகள் வழங்கி சிறப்பிக்கிறார்

நிகழ்ச்சியில் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு. மகேஷ்குமார், மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன், தொகுதி பார்வையாளர் கே.எஸ்.ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர் மின்னல் கந்தப்பன், மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் எம்.சி. , பகுதி நிர்வாகிகள் இ.முருகேசன், ஆர்.ராஜ்குமார், மு. ஆரோக்கியம், ஆர்.அருணகிரி, மு.பாக்கியலட்சுமி, வட்ட கழக செயலாளர்கள் நேருநகர் எஸ்.பாட்சா, வே.முருகன், நா.ராதாகிருஷ்ணன், எல். ஆரோக்கியராஜ், கோட்டூர்புரம் க.மணி, கோட்டூர் கோ. சண்முகம், சைதை ஆ.வரதன், மாவட்ட பிரதிநிதிகள் க.உமாபதி, வே.ரமேஷ்குமார், ஜி.யோவான், டி.வி.நரசிம்மன், ச. சேகர், என்.நந்தகோபால், எஸ். ராதாகிருஷ்ணன், ஏ.மஜீத், இரா.சுதாபிரியன், எஸ்.ஜே. சலாம், கோட்டூர் ந.பாபு, கே. எம்.எஸ்.கணேசன், மு.மகேஷ், லாரன்ஸ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கிறார்கள்.

சைதை கிழக்கு பகுதியில் உள்ள வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், சார்பு மன்ற நிர்வாகிகள், பாக முகவர்கள் மற்றும் பாக பணியாளர்கள் திரளாக நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டும் என்று சைதை கிழக்கு பகுதி செயலாளரும், 13வது மண்டலக்குழு தலைவருமான இரா.துரைராஜ் எம்.சி.கேட்டுக் கொண்டுள்ளார்.

திருவொற்றியூர் பகுதி குடும்ப அட்டைதாரர்களுக்கு

பொங்கல் தொகுப்பு - ரொக்கம் ரூ.3000!

கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. வழங்கினார்!

சென்னை, ஜன.10- திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிகுட்டப்பட்ட 1,28,783 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு மற்றும் ரொக்கம் ரூ.3000 வழங்கும் பணியை திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர் திருவொற்றியூர் மார்வாடி காலனி, பாரதியார் நகர், மாணிக்கம் நகர், அம்பேத்கர் நகர், சின்ன எர்ணாவூர், பாரதியார் நகர், கலைஞர் நகர், எர்ணாவூர் ஆகிய பகுதிகளில் உள்ள நியாய விலை கடைகளில் பொதுமக்களுக்கு வழங்கி துவக்கி வைத்தார்.

இந்நிகழ்வில் 5வது வட்டக் கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம், மாவட்ட பிரதிநிதி எஸ். மகேந்திரன், மாவட்ட அயலக அணி தலைவர் எஸ்.டி.சங்கர், மாவட்ட அயலாக அணி துணை அமைப்பாளர் கார்த்திக், கழகப் பேச்சாளர் வாசு கருணாநிதி, மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ்.செல்வம் டி.மகேந்திரன், வே.கோபால் கே.ரமேஷ், சோழன், எஸ்.விஜயராகவன், டெய்லர் மணி, சார்லஸ், டி. எஸ்.பாபு கே.செந்தில் எச். அலெக்ஸ் ஆர்.எம்.செல்வம் எஸ்.ஈசாக் ஆர்.சேகர் டி.ராஜவேல், மதுரை முத்து, ஜோதி, அன்பு செல்வம், அஸ்வின், சத்யா, தன்ராஜ், பீட்டர், ரவி, சிங்காரம், சீதாராமன், ஜோதி சதீஷ் சேதுராமன் முனுசாமி, காந்திநகர் செல்வம், விஜயலட்சுமி, சாவித்திரி, விஜயா, ராஜேஸ்வரி, தேவி வி.வசந்த், வை.ஃபாருக் ஜி.சுப்பிரமணி பிரவீன்ராஜ் அந்தோணி, ஜோசப், கஜேந்திரன் டி.ரமேஷ் கோவிந்தசாமி, அன்பு மற்றும் கழக தோழர்கள் கலந்து கொண்டனர்.

திருவொற்றியூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு மற்றும் ரொக்கம் ரூ.3000 வழங்கும் பணியை சட்டமன்ற உறுப்பினர், மாநில மீனவரணி துணை தலைவர் கே.பி.சங்கர் திருவொற்றியூர் மார்வாடி காலனி, பாரதியார் நகர், மாணிக்கம் நகர், அம்பேத்கர் நகர், சின்ன எர்ணாவூர், பாரதியார் நகர், கலைஞர் நகர், எர்ணாவூர் ஆகிய பகுதிகளில் உள்ள நியாய விலை கடைகளில் பொதுமக்களுக்கு வழங்கி துவக்கி வைத்தார்.

ஜனவரி 10–11 தேதிகளில் நடைபெறும் வாக்காளர் சிறப்பு முகாமில் விடுபட்ட

வாக்காளர் சேர்க்கும் பணியில் தீவிரமாக களப்பணியாற்ற வேண்டும்!

சென்னை கிழக்கு மாவட்ட கழகத்தினருக்கு அமைச்சர் – மாவட்ட செயலாளர் பி,கே,சேகர்பாபு வேண்டுகோள்!

சென்னை, ஜன.10- தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் அவர்கள் அறிவுறுத்தலின்படி சென்னை கிழக்கு மாவட்டத்தில் உள்ள கொளத்தூர் துறைமுகம் எழும்பூர் திரு.வி.க. நகர் வில்லிவாக்கம் அம்பத்தூர் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் வாக்காளர் பட்டியலை பிரித்து பகுதி கழக/ வட்டக் கழகச் செயலாளர்கள் மூலம் வழங்கப்பட்டு அந்த வரைவு வாக்காளர் பட்டியலும்,வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட ஓரணியில்தமிழ்நாடு உறுப்பினர்கள் பட்டியலும் மற்றும் விடுபட்ட வாக்காளர்கள் பட்டியலும் BLA 2வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அப்படி ஒப்படைக்கப்பட்டுள்ள பட்டியல்களை அந்தந்த பூத் BLA2,BDA, BLC மற்றும் கழகத்தினர் அனைவரும் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியல் சரி பார்த்து, பூத் வாரியாக வாக்காளர் பட்டியலில் எஸ் ஐ ஆர் படிவம் தந்தும், வரைவு வாக்காளர் பட்டியலில் விடுபட்ட வாக்காளர்களையும், வாக்காளர் பட்டியல் பெயர் இருந்தும் எஸ் ஐ ஆர் படிவம் கிடைக்கப் பெறாத வாக்காளர் பட்டியலையும் மற்றும் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களையும் கண்டறிந்து மொத்தத்தில் ஒவ்வொரு பாகத்திலும் நம்முடைய கழக வாக்காளர் கழக ஆதரவு வாக்காளர் எவர் பெயரும் விடுபடாத வகையில் இந்திய தேர்தல் ஆணையத்தால் ஜனவரி 10,11 ஆகிய தேதிகளில் மூன்றாம் கட்டமாக நடைபெறும் வாக்காளர் சேர்ப்பு முகாமில் அனைவரையும் படிவம் 6 ல் வாக்காளர்களாக சேர்க்கும் முக்கிய பணியில் மும்முரமாக ஈடுபட வேண்டும் என்றும் மேலும் இறந்த, இடம் மாறிய வாக்காளர்களின் பெயர்களை மீண்டும் வரைவு வாக்காளர் பட்டியலில் இடம்பெற்று இருந்தால் அவர்களின் பெயர்களை படிவம் 7ல் நீக்கிடும் பணியில் உடனே ஈடுபட வேண்டும்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி. கே.சேகர்பாபு கேட்டுக் கொண்டுள்ளார்.

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் உத்தரமேரூர் சட்டமன்றத் தொகுதி தம்மனூர் ஊராட்சியில் தமிழக அரசின் இலவச வேட்டி சேலை மற்றும் திராவிட சமத்துவ பொங்கல் தொகுப்பினை ஒன்றிய செயலாளர் க. குமணன் வழங்கினார் உடன் ஊராட்சி மன்ற தலைவர் டி.எல்.தயாளன் ஒன்றிய கழக நிர்வாகிகள் கன்னியப்பன் பரசுராமன் தட்சிணாமூர்த்தி கமலக்கண்ணன் திருநாவுக்கரசு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கங்கன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.